இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
முகாமைத்துவக் கற்கைப் பீடம்

முகாமைத்துவக் கற்கைகள் (சிறப்பு) பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம்
OSU3571: முகாமைத்துவக் கோட்பாடுகள்
இறுதிப் பரீட்சை -2025/2026
காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி: 13 ஜூன் 2026 *நேரம்: மு.ப 9.30 - நண்பகல் 12.30*

அறிவுறுத்தல்கள்

- இவ்வினாத்தாள் ஏழு (07) வினாக்களை உள்ளடக்கியுள்ளது. **தரப்பட்ட ஏழு (07) வினாக்களில் ஏதேனும் நான்கு (04) வினாக்களுக்கு விடையளிக்க.**
- அனைத்து வினாக்களுக்கும் சமமான புள்ளிகள் ஒதுக்கப்பட்டுள்ளது (ஒவ்வொரு வினாவிற்கும் 25 புள்ளிகள்).
- தெளிவற்ற கையெழுத்துக்கள் ஏற்கப்பட மாட்டாது

வினா 01

பின்வரும் ஒவ்வொரு கூற்றிலும் நீங்கள் <u>உடன்படுகிறீர்களா அல்லது உடன்படவில்லையா</u> என்பதைக் குறிப்பிடவும். உங்கள் ஒவ்வொரு விடைக்குமான நியாயப்படுத்தலை சுருக்கமான எழுதுக.

i. முகாமைத்துவத்தை வரையறுப்பதற்கு உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒற்றை வரைவிலக்கணம் இல்லை.

ii. முகாமையாளர்கள் ஒரே நேரத்தில் , வினைதிறன் (efficiency) விளைதிறன் (effectiveness) மற்றும் உற்பத்தித்திறனை (productivity) மேம்படுத்த முடியும்.

iii. Mintzbergகின் கூற்றுப்படி, 'செய்தித் தொடர்பாளர் (Spokesperson)' வகிபாகம் தகவல் தொடர்பு வகிபாகத்தினுள் உள்ளடங்கும்.

iv. VUCA சூழலில் சிறந்த முடிவுகளை எடுக்க 'பாரம்பரிய முகாமைத்துவ அணுகுமுறையை' விட 'நிர்வாக அணுகுமுறை' மிகவும் பொருந்தும்.

v. உயர்மட்ட மற்றும் முதல் நிலை முகாமையாளர்களுடன் ஒப்பிடும்போது நடுத்தர நிலை முகாமையாளர்களுக்கு குறைவான மனிதவளத் திறன்களே தேவைப்படுகின்றன.

(5 x 5 = 25 புள்ளிகள்)

வினா 02

Fruity Drink Pvt Ltd என்பது இலங்கையில் உள்ள ஒரு பழச்சாறு உற்பத்தி நிறுவனமாகும். இந்நிறுவனம் சமீபத்தில் பல சுற்றுச்சூழல் சவால்களை சந்தித்துள்ளது. சீனி சேர்க்கப்பட்ட பானங்கள் மீது அரசாங்கம் புதிய வரிகளை அறிமுகப்படுத்தியமையினால், தயாரிப்பு விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. பொருளாதார பணவீக்கம் வாடிக்கையாளர்களின் கொள்வனவு சக்தியைக் குறைத்துள்ளதுடன் அது விற்பனை குறையவும் வழிவகுத்தது. மேலும் வாடிக்கையாளர்கள் இப்போது அதிக ஆரோக்கிய விழிப்புணர்வுடன் இருப்பதால் ஆரோக்கியமான பான விருப்பங்களை நுகரவே விரும்புகிறார்கள். அதே வேளை, புதிய தொழில்நுட்ப அறிமுகத்தால் போட்டியாளர்கள், ஆன்லைன் கட்டளை மற்றும் விரைவான விநியோக சேவைகளை அறிமுகப்படுத்தியுள்ளனர். சுற்றுச்சூழல் அழுத்தத்தின் காரணமாக நிறுவனம் பிளாஸ்டிக் பயன்பாட்டைக் குறைக்கவும், நிலைத்தன்மையுடைய உற்பத்தி முறைகளைப் பின்பற்றும் கட்டாயத்திற்கு உள்ளாகியுள்ளது. அத்துடன், கடுமையான உணவுப் பாதுகாப்புச் சட்டங்கள் மற்றும் தொழிலாளர் ஒழுங்குமுறை சட்டங்கள் நிறுவனத்தால் பின்பற்றப்பட வேண்டும்.

PESTEL பகுப்பாய்வினைப் பயன்படுத்தி, Fruity Drink Pvt Ltd டை பாதிக்கும் வெளிப்புற சுற்றுச்சூழல் காரணிகளை பகுப்பாய்வு செய்வதுடன், அக் காரணிகள் நிறுவன செயல்திறனை எவ்வாறு பாதிக்கின்றன என்பதை விளக்குங்கள்.

(25 புள்ளிகள்)

வினா 03

i. திட்டமிடல் என்பது மிக முக்கியமான முகாமைத்துவ செயல்பாடுகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது, ஏனெனில் இது நிறுவனங்கள் தங்கள் இலக்குகளை திறம்பட அடைய உதவுகிறது. இருப்பினும், திட்டமிடல் செயல்பாட்டின் போது முகாமையாளர்கள் பெரும்பாலும் பல்வேறு சவால்களை எதிர்கொள்கின்றனர். திட்டமிடலின் முக்கியத்துவத்தைப் பற்றி விவாதிப்பதுடன், நிறுவனத் திட்டமிடலில் ஈடுபடும்போது முகாமையாளர்கள் எதிர்கொள்ளும் சவால்களை தர்க்க ரீதியாக ஆராய்க. (15 புள்ளிகள்)

ii. நிறுவனங்களில் பயன்படுத்தப்படும் பல்வேறு வகையான கட்டுப்படுத்தல் முறைகளைப் பற்றி விவாதித்து, நிறுவன இலக்குகளை அடைவதில் அவற்றின் முக்கியத்துவத்தை விளக்குக. (10 புள்ளிகள்)

வினா 04

i. "இன்றைய நிலையற்ற மாறும் சூழலில் திறம்பட செயல்பட, தலைவர்கள் சர்வதிகார தலைமைத்துவத்திற்கு அப்பால் சென்று மனிதநேய தலைமைத்துவ அணுகுமுறைகளைத் தழுவிக்கொள்ள வேண்டும்." நவீன தலைமைத்துவக் கோட்பாடுகள் மற்றும் அணுகுமுறைகளைப் பயன்படுத்தி இக்கூற்றை தர்க்க ரீதியாக மதிப்பிடுக. (15 புள்ளிகள்)

ii. தொடர்பாடல் செயல்முறையை விவரித்து, ஒவ்வொரு கட்டத்திலும் ஏற்படக்கூடிய தடைகள் நிறுவன செயல்திறனை எவ்வாறு பாதிக்கும் என்பதை விவாதிக்க. (10 புள்ளிகள்)

வினா 05

"TechnoWave" என்பது ஒரு உற்பத்தி நிறுவனமாகும், இது சமீபத்தில் ஒரு சிறிய பணியிடத்திலிருந்து, பெரிய அளவிலான தொழிற்சாலைக்கு மாறியுள்ளது. முறையான படிநிலை (official hierarchy) இருந்த போதிலும், ஊழியர்கள் துறைகளில் முறைசாரா சமூகக் குழுக்களை உருவாக்கியிருப்பதையும் (informal social groups), அவை பெரும்பாலும் அதிகாரப்பூர்வ குறிப்பாணைகளை (official memos) விட வேகமாக தகவல்களைப் பரிமாறிக்கொள்வதையும் முகாமையாளர் கவனித்துள்ளார். எனவே, செயல்பாடுகளை நிலைப்படுத்த, முகாமையாளர் சமூக ரீதியிலான (social dynamics) இயக்கவியலை நிர்வகிக்கும் அதே வேளையில், நிறுவனக் கட்டமைப்பையும் சீரமைக்க வேண்டும்.

நிறுவன கட்டமைப்பைப் பற்றிய உங்கள் அறிவைப் பயன்படுத்துவதன் மூலம், இந்த நிறுவனத்திற்கு ஒரு செயல்பாட்டு அமைப்பு (functional structure) எவ்வாறு வடிவமைக்கப்படும் என்பதை காட்டுவதுடன், முறைசாரா குழுக்கள் மற்றும் அதன் செயல்பாடுகள் ஒட்டுமொத்த செயல்திறனை எவ்வாறு பாதிக்கின்றன என்பதை தர்க்க ரீதியாக மதிப்பீட்டு அதன் நன்மைகள் மற்றும் சாத்தியமான சவால்களையும் எடுத்துக்காட்டுக. (25 புள்ளிகள்)

வினா 06

i. ABC உற்பத்தி நிறுவனம் கடந்த இரண்டு ஆண்டுகளில் அதிக ஊழியர் விலகல் விகிதத்தை சந்தித்து வருகிறது. ஊழியர்கள் போட்டித்தன்மை வாய்ந்த ஊதியத்தைப் பெற்றாலும், பலர் மன அழுத்தம், அங்கீகாரமின்மை மற்றும் வரையறுக்கப்பட்ட தொழில் வளர்ச்சி வாய்ப்புகள் குறித்து புகார் கூறுகின்றனர். சமீபத்தில், பல திறமையான ஊழியர்கள் ராஜினாமா செய்து போட்டியாளர் நிறுவனங்களில் இணைந்துள்ளனர். ஒரு பொருத்தமான ஊக்கக் கோட்பாட்டைப் (motivational theory) பயன்படுத்துவதன் மூலம், ABC உற்பத்தி நிறுவனத்தில் ஊழியர் விலகலுக்கான காரணங்களை பகுப்பாய்வு செய்து, ஊழியர்களைத் தக்கவைப்பை மேம்படுத்துவதற்கான உத்திகளை பரிந்துரைக்க. (13 புள்ளிகள்)

ii. GlobalTech உற்பத்தி நிறுவனம் சமீபத்தில் தயாரிப்பு தரம் மற்றும் வாடிக்கையாளர் திருப்தியை மேம்படுத்த மொத்த தர முகாமைத்துவத்தை (TQM) அறிமுகப்படுத்தியது. இருப்பினும், ஒழுங்கற்ற தொடர்பாடல் முறைகள், குழுப்பணி இன்மை மற்றும்

தீர்மானமெடுப்பதில் ஊழியர் பங்கேற்பை ஊக்கப்படுத்தாத நிறுவனக் கலாச்சாரம் காரணமாக இந்த முயற்சி ஊழியர்களிடமிருந்து எதிர்ப்பைச் சந்தித்தது. தர மேம்பாட்டுத் திட்டங்களில் அதிக முதலீடு செய்த போதிலும், மொத்த தர முகாமைத்துவம் (TQM) மீதான ஊழியர்களின் ஈடுபாடு குறைவாக இருந்தது என்பதை முகாமையாளர்கள் கவனித்தனர். இச் சூழ்நிலையை கருத்தில் கொண்டு, GlobalTech உற்பத்தி நிறுவனத்தை பாதிக்கும் நிறுவன கலாச்சார தடைகளைப் பற்றி விவாதிப்பதுடன், தரத்தை மையமாகக் கொண்ட நிறுவன கலாச்சாரத்தை உருவாக்குவதற்கான உத்திகளைப் பரிந்துரைக்க. (12 புள்ளிகள்)

வினா 07

i. ஒரு நிறுவனத்தின் வாழ்க்கைச் சுழற்சியை (life cycle) விவரித்து, ஒரு சமூகத்திற்கு வணிக நிறுவனங்களின் வளர்ச்சி ஏன் முக்கியமானது என்பதை விளக்கவும். (07 புள்ளிகள்)

ii. வலையமைப்பு பகுப்பாய்வு (network analysis) ஒரு முக்கியமான அளவுசார் திட்டமிடல் கருவியாகும். வலையமைப்பு பகுப்பாய்வு நுட்பத்தை விவரித்து, பொருத்தமான உதாரணத்தைப் பயன்படுத்தி வலையமைப்பு பகுப்பாய்வு வரைபடத்தை உருவாக்குவதில் பின்பற்ற வேண்டிய படிகளை விளக்கவும். (08 புள்ளிகள்)

iii. நீங்கள் தெற்கு இலங்கையில் அமைந்துள்ள ஒரு முன்னணி ஹோட்டலில் செயல்பாட்டு முகாமையாளராக பதவி வகிக்கிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். உங்கள் நிறுவனத்தின் செயல்பாட்டு அமைப்பை வடிவமைக்கும்போது நீங்கள் எடுக்கும் நான்கு முக்கிய முடிவுகளை விளக்குங்கள். (10 புள்ளிகள்)

••பதிப்புரிமைக்குரியது••